## இயல்-3 கோபல்லபுரத்து மக்கள்

**முன்னுரை;**

“ கோபல்லபுரத்து மக்கள்” கதையின் ஆசிரியர் கரிசல் எழுத்தாளர் கி.ராஜநாராயணன். நமக்குப் பாடப் பகுதியாக வந்திருக்கும் இக்கதையில் கிராமத்து வெள்ளந்தி மனிதர்கள் காட்டும் விருந்தோம்பல்,வரவேற்பு, எளிமையான உணவு,பசி என்று வந்தவர்களுக்குத் தம்மிடம் இருப்பதைப் பகிர்ந்து கொடுக்கும் நேயம் ஆகியவை கதைக் கருவாக உள்ளன. இந்நூல் 1991 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி பரிசினைப் பெற்றுள்ளது.

**அதிகாலை நேரம்;**

கோபல்லபுரத்து வெள்ளந்தி மனிதர்களில் ஒருவன் அன்னமய்யா. சாதாரண ஏழை புஞ்சை விவசாயி.எப்போதும் அந்தப் பகுதி சாலையோரமாக வரும் வயோதிகர்கள்,தேசாந்திரிகளைப் பார்த்தவுடன் ஏதாவது குடிக்கக் கொடுப்பவன்.

**அன்னமய்யாவும் வாலிபனும்:**

அன்னமய்யா, புஞ்சைகள் நிறைந்திருந்த வழியில் வந்து கொண்டிருந்த போது சன்னியாசிபோல் இருக்கும் அந்த ஆளைப் பார்த்தான்.அவன் சன்யாசி அல்ல.ஒரு வாலிபன் என்பதை அறிந்தான்.அவன் முகம் பசியால் வாடி இருந்தது.நடக்க முடியாமல் காலகளை நீட்டிப் புளிய மரத்தில் சாய்ந்திருந்தான்.அவன் அன்னமய்யாவைப் பார்த்து சிறு புன்னகை காட்டினான்.அவன் பார்ப்பதற்கு லாட சன்யாசி போல் இருந்தான்.

**நேசமும் நேயமும்;**

அந்த வாலிபன் தன் அருகில் நின்றிருந்த அன்னமய்யாவைப் பார்த்து “தம்பி,கொஞ்சம் குடிக்கத் தண்ணி கிடைக்குமா? என்றான்.உடன் அன்னமய்யா, என் தோளைப் பிடித்துக் கொண்டுநடந்து வந்தீர்கள் என்றால், அருகு எடுத்துக் கொண்டிருப்பவர்களிடம் சென்று “நீச்சுத் தண்ணி” வாங்கித் தருகிறேன் அலுப்பு குறையும் என்றான். “கொஞ்சம் பொறு” என்று கூறி அவனே மெதுவாக நடந்து வந்தான்.ஒரு வேப்பமரத்தின் அடியில் ஏகப்பட்ட மண் கலயங்கள் இருந்தன. அந்தக் கலயங்கள் கரிசல் மண் தரையில் பாதி புதைக்கப்பட்டிருந்தன.அன்னமய்யா ஒரு கலயத்தில் இருந்த நீத்து பாகத்தைச்

சிரட்டையில் வடித்துக் கொடுத்து ‘சும்மா கடிச்சுக் குடிங்க’ என்றான். வாலிபன் அதைக் குடித்துவிட்டு மீண்டும் வேப்பமர நிழலில் படுத்துவிட்டான்.

**பொருத்தமான பெயர்:**

வாலிபன் எழுந்ததும் “எங்கிருந்து வர்ரீங்க,எங்க போகணும்?” உங்கள் பெயர் என்ன? என்று அன்னமய்யா கேட்டதும், என் பெயர் பரமேஸ்வரன், மணி என்றும் கூப்பிடுவார்கள் என்றான்.அன்னமய்யாவை நோக்கி உன் பெயர் என்ன? என்று கேட்டதும் அன்னமய்யா என்று கூறினான். எவ்வளவு பொருத்தமான பெயர் என்று நினைத்துக் கொண்டான் மணி

**விருந்தோம்பல்:**

அன்னமய்யா மணியைக் கூட்டிக் கொண்டு, அவனது நண்பன் சுப்பையாவின் புஞ்சைக்கு வந்தான். அவர்களை வரவேற்ற சுப்பையா, தங்களோடு அமர்ந்து உண்ணும்படி கேட்டுக் கொண்டனர். அவர்களுடன் வட்டத்தில் அமர்ந்தான் மணி. கையில் வைத்த கம்மஞ்சோற்று உருண்டையுடன், துவையலையும் சேர்த்துச் சாப்பிட்டான். மணி உண்ட மகிழ்ச்சியில் திரும்பவும் படுத்து அமைதியாகக் கண்களை மூட, மற்றவர்கள் ஊர்க்கதைகள் பேச ஆரம்பித்தார்கள்.

**முடிவுரை:**

கிராமத்து விருந்தோம்பல் கிடைத்தற்கரிய வரம். பசித்தவருக்கு உணவு படைத்தல் ஓர் அறச்செயலாகவும், பண்பாட்டுக் கூறுகளாகவும் இருந்ததை இக்கதையின் மூலம் நம்மால் அறியமுடிகிறது. வாழும் காலம்வரை வள்ளலாய் வாழ்வதை விட விருவிக்க உற்றோராய் வாழ்ந்து, பசிப்பிணி இல்லா பாரதத்தைப் படைக்க அறமும், பண்பும் கொண்டு வாழ்வோமாக!

## இயல்-4 விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை

**முன்னுரை:**

அறிவியலின் வளர்ச்சி மனிதனின் அறிவை விரிவாக்குகிறது. ஐயங்களை நீக்குகிறது. இயற்கையின் மர்ம முடிச்சுகளை அவிழ்க்கும் அறிவியல் சிந்தனை போற்றுதற்குரியது. அதிலும் தன்னால் எந்த இயக்கமும் மேற்கொள்ள இயலாத நிலையிலும் அறிவியலின் இயங்கும் தன்மையை உணர்ந்து, புதுப்புது உண்மையைச் சொன்னவரே ஸ்டீபன் ஹாக்கிங். அவரைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**ஸ்டீபன் ஹாக்கிங்:**

இங்கிலாந்தின் மருத்துவமனை ஒன்றில் 1963-ஆம் ஆண்டு பக்கவாதம் என்னும் நரம்பு நோயால் 21 வயது இளைஞர் அனுமதிக்கப்பட்டார். மருத்துவத்திற்குப் பின், சில தினங்களே அவர் உயிர் வாழ்வார் என்று சொல்லப்பட்டது. ஆனால், அந்த இளைஞர் 53 ஆண்டுகள் உயிரோடு இருந்தார். அவர்தான் ஸ்டீபன் ஹாக்கிங். 1985-ல் மூச்சுக்குழாய்த் தடங்களால் பேசும் திறனை இழந்தார். கன்னத்தின் தசை அசைவும் கண்சிமிட்டலும் தவிர, உடலிலுள்ள அத்தனை பாகங்களும் செயலிழந்து விட்டன.இருப்பினும், கன்னத்தசை அசைவு மூலம் கணினியில் தன் கருத்தைத் தட்டச்சு செய்து வெளிப்படுத்தினார். இவருக்குத் துணையாகச் செயல்பட்டது செயற்கை நுண்ணறிவு கணினி.

**கருந்துளை:**

நமது பால்வீதியில் கோடிக்கணக்கான விண்மீன்கள் ஒளிர்கின்றன. அவற்றுள் ஒன்றே ஞாயிறு. ஒரு விண்மீனின் ஆயுட்காலம் முடியும்போது அந்த விண்மீனுக்குள் ஈர்ப்பு விசை சுருங்கச் சுருங்க ஈர்ப்பு விசை விண்மீனுக்குள் அதிகமாக உயர்ந்து கொண்டே செல்கிறது. சுருங்கிய விண்மீனின் ஈர்ப்பு எல்லைக்குள் எது சென்றாலும் சரி, ஏன் ஒளியும் கூடத் தப்ப முடியாது. இத்தகைய விண்மீனுக்குள் ஈர்க்கப்படும் இத்துளையே கருந்துளை என்கிறார் ஜான்லீவர். இவர் ஓர் அமெரிக்க அறிவியலார். இவரே முதன் முதலில் கருந்துளை என்ற சொல்லையும் கோட்பாட்டையும் வெளியிட்டவர்.

**ஹாக்கிங் கதிர்வீச்சு**

ஸ்டீபன் ஹாக்கிங் தமது ஆராய்ச்சியின் முடிவில் கருந்துளைகள் கருப்பாக இருப்பதில்லை என்றும், அதிலிருந்து கதிர்வீச்சுகள் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும் எனவும் எனவும் கண்டறிந்தார்.மேலும் கருந்துளையில் இருந்து வரும் கதிர்வீச்சும் அணுதுகள்களும் கசிந்து இறுதியில் வெடித்து மறைந்து விடும் எனவும் கண்டறிந்தார்.இக்கருந்துளைக்குள் செல்லும் எந்தவொரு பொருளும் தப்பித்து வெளியே வரமுடியாது எனவும் ஸ்டீபன் ஹாக்கிங் தனது ஆராய்ச்சியின் முடிவை வெளியிட்டார். இந்த ஆராய்ச்சியின் முடிவே "ஹாக்கிங் கதிர்வீச்சு" என்று அழைக்கப்படுகிறது. இறுதியாக 'அழிவு ஆற்றல்' என்று கருதப்பட்ட கருந்துளையைப் "படைப்பின் ஆற்றலாக" நிறுவினார் ஸ்டீபன்.

**ஹாக்கிங்சின் அறிவியல் முன்னோடிகளும், பெற்ற விருதுகளும்:**

ஐன்ஸ்டைன், நியூட்டன் முதலோனோர் ஸ்டீபன் ஹாக்கிங்சின் முன்னோடிகள். அறிவியல் கருந்துளைக் கோட்பாடுகளை எளிய மக்களுக்கும், புரியும் வகையில் கூறியதால் அவருக்குப் பல விருதுகள் கிடைத்தன. அவற்றுள் சில:

1.அமெரிக்காவின் உயரிய விருதான அதிபர் விருது.

2.ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்ன் விருது.

3.உல்ஃப் விருது.

4.காப்ளி பதக்கம்.

5.அடிப்படை இயற்பியல் பரிசு.

**முடிவுரை:**

உடலில் ஏற்பட்ட உறுப்பு இழப்போ, ஊனமோ ஒருவருக்குக் குறையாகாது. இவர்,அறிவியல் உலகில் மட்டுமன்றி, சமூக உளவியல் அடிப்படையிலும், தன்னம்பிக்கையிலும் சிகரமாக விளங்கியவர். அறிவுத் தேடலில் ஒரு மாமேதை. வியக்கத்தக்க மனிதர் என்பதை இவரின் ஒவ்வொரு நிகழ்வுகளும் ஆராய்ச்சிகளும் காட்டுகின்றன என்று கூறினால் அது மிகையில்லை.